[8th September 1970

இயலாத நிலையில், தனியார் ஏற்படுத்துகிற பல்தொழில் பயிற்சிப் பள்ளிக்காவது அரசு ஏதாவது உதவி செய்ய முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது நான் இங்கே கூறிய விவரங்களிலிருந்து கடலூரில் ஒரு புதிய பல்தொழில் பயிற்சிப்பள்ளி உருவாவது என்பது அவ்வளவாக சரியாக இருக்காது என்ற காரணத்தால்தான், இப்போது அங்கே ஏற்படுத்துவது கூட நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் கூட ஏ.வி. மெய்யப்பன் டிரஸ்ட் மூலமாக ஒரு பல்தொழில் பயிற்சிப் பள்ளியும், கோத்தாரி மூலமாக இன்னொரு பயிற்சிப் பள்ளியும் ஏற்படுத்தத் திட்டமிட்டு, இவையிரண்டுமே இப்போது ஏற்பட்டிருக்கிற நிலைமையை ஒட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. வேறு பல இடங்களில் நிறைய ஸ்தானங்கள் காலியாக இருப்பதால், புதிதாகப் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் ஏற்படுத்துவது என்பது இப்போது தேவையற்றதாகக் கருதப்படும். எதிர்காலத்தில் தேவைப்படுமானால், காலம் கனிகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்து கவனிக்கப்படலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. Minister mentioned that certain courses which would be job-oriented would be started in the polytechnics. May I know, Sir, whether the Government would consult Industry also in this regard and not leave it to the Director of Technical Education alone to decide what courses could be started in these polytechnics which would be job-oriented ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட தொடர்பு வைத்துக்கொண்டுதான் ஒரு முடிவு எடுக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதே கூட என்னென்ன தொழில்களுக்கு ஆட்கள் தேவைப்படுகிறார்கள் என்று அவர்களைக் கலந்து எப்படிப்பட்ட தொழில் நுணுக்கம் உள்ளவர்கள் தேவைப்படுகிறார்கள் என்று கணக்கெடுத்து, அதன் அடிப்படையில் தான் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறோம். இதிலும் அவர்களோடு கலந்து உரையாடி முடிவெடுக்கும் நிலை இருக்கும். ஏனென்றால் ''டைரக்டர் ஆஃப் டெக்னிகல் எஜுகேஷன்'' மட்டுமே இதனுடைய உண்மையான சூழ்நிலையை அறிந்து முடிவெடுக்கும் தன்மையில் இருக்க மாட்டார். தொழில் துறையைச் சார்ந்தவர்களையும் கலந்துதான் ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

Suspended Teachers

*74. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) the number of teachers suspended from service in Elementary and Higher Elementary Schools in Palladam Panchayat Union during 1968-69 ;

(*b*) the number of such suspended teachers re-instated in service;

8th September 1970]

(*c*) whether full salary has been paid to the re-instated teachers for the period of suspension ; and

(*d*) if not, the reasons therefor ?

நிறுத்தி வைக்கப்பட்ட ஆசிரியர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1968-69-ஆம் ஆண்டில், பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் பணியிலிருந்து தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டனர் ?

(இ) அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட ஆசிரியர்களில் எத்தனை பேர் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் ?

(உ) மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்களுக்கு அவர்கள் பணியிலிருந்து தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட காலத்திற்கான முழுச்சம்பளம் அளிக்கப்பட்டு விட்டதா ?

(எ) இல்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :

(அ) 3.

(இ) 3.

(உ) இல்லை.

(எ) தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட காலத்திற்கு, இரு ஆசிரியர்கட்கும் வாழ்க்கைப்படி (Subsistence allowance) அளிக்கப்பட்டது. தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட காலத்திற்கென அவர்களுக்கு முழுச் சம்பளம் கொடுப்பது குறித்து பொள்ளாச்சி மாவட்டக் கல்வி அதிகாரி பரிசீலனை செய்து வருகிறார். மற்றொரு ஆசிரியர் வாழ்க்கைப்படிக்கு விண்ணப்பித்துக் கொள்ளாததால் அவருக்கு அது அனுமதிக்கப்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : பரிசீலனை எவ்வளவு நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : பெரும்பாலோர் மறுபடியும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர். 12-11-1968-லிருந்து 30-7-1969 வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட ஆசிரியர்கள் பிறகு வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதுபற்றி மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரியினுடைய செயற் குறிப்புகளை இயக்குனரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இதில் ஓராண்டுக்கு மேல் காலத்தாழ்வு ஏற்பட்டுவிட்டதால், விரைவில் இதைத்தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.